


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கிசான் மேளா பயிற்சி நாகர்கோவில், ரோட்டரி கம்யூனிட்டி அரங்கத்தில் இன்று (04.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 8/2017 நாள்: 04.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கிசான் மேளா பயிற்சி இன்று (04.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கிசான் மேளா பயிற்சி நாகர்கோவில், ரோட்டரி கம்யூனிட்டி அரங்கத்தில் இன்று (04.01.2017) நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று தெரிவித்ததாவது:-

வோளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மற்றும் பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சாயி யோஜனா மூலம் நிதிஉதவி பெற்று, மாவட்ட அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கிசான் மேளா இன்று நடைபெற்றது. இந்த பயிற்சியில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம், சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் மழைநீர் தெளிப்பு ஆகிய திட்டங்களின் மூலம் எவ்வாறு அதிக மகசூல் பெறலாம் எனவும், அரசாங்கம் அளிக்கப்படும் மானியம் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகள், தோட்டக்கலைதுறை மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகளால் வழங்கப்படும் நெறிமுறைகளை பின்பற்றுவதோடு, மற்ற விவசாயிகளுக்கும் எடுத்துக்கூறி, விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், அரசு விவசாயிகளுக்கு, விவசாயம் செய்ய பல்வேறு வங்கிகள் மூலம் கடனுதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. இதை அனைத்தையும் விவசாயிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் விவசாயிகள் பயிற்சியில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், அதனை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வதோடு, இந்த வழிமுறைகளை பின்பற்றி, விவசாயிகள் அனைவரும் பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இப்பயிற்சியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னதாக தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை சார்பாக வைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (வேளாண்மைதுறை) திரு. இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், தோட்டக்கலை துறை இணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் திரு. பி. ஆனந்த்பாபு, பேராசிரியர் மற்றும் தலைவர் (வேளாண்மை ஆராய்ச்சிநிலையம்) திரு. ஜேன் சுஜாதா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.